
# ஒரு பூவின் மடல்




முல்லைக் கவி தனுஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

# முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குபடியவிடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்ய வேண்டாமென மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**உங்களிடம் ஒரு நல்ல நூல் இருந்தால் அது உங்களுக்குமட்டும் பயன்தரும் அதுவே நூலகத்தில் இருந்தால் அதனால் பலரும் பயன் பெறுவார்கள்.**

எனவே தங்களிடம் பயனுள்ள நூல்கள் இருந்தால் அவற்றை எம் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்து பலரும் பயன் பெற்றிட உதவுங்கள்.

**"அறிவைப் பெருக்க துணைபுரிவோம்"**

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donat - 12.77

மத்தி  நூலகம்
மத்திய சமூக நிலையம்
விசுவமடு.

# ஒரு பூவின் மடல்

06159

முல்லைக்கவி தனுஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கவிதைத் தொகுப்பு | : | "ஒரு பூவின் மடல்" |
| கவிஞர் | : | பங்கஜன் தனுஜா |
| | | (விசுவமடு அபிக்குட்டி) |
| தொடர்பு | : | |
| விலாசம் | : | 46/2 தொட்டியடி விசுவமடு. |
| | | முல்லைத்தீவு. |
| தொலைபேசி | : | 0772179485, 0766551305 |
| email | : | pankajanthanuja@.gmail.com |
| பதிப்புரிமை | : | பங்கஜன் தனுஜா |
| முதற்பதிப்பு | : | 2015.09.19 |
| அச்சுப் பதிப்பு | : | மதிகலர்ஸ், நல்லூர். |
| | | 0212229285 |
| பக்கம் | : | i - 86 |
| ISBN இலக்கம் | : | 978-955-42640-0-7 |
| விலை | : | 120/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பூவின் மடல்

செல்வி.ப.தனுஜா ஈழமணித் திருநாட்டின் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு தொட்டியடியில் பிறந்தவர் மு/விசுவமடு ம.வியில் சாதாரண தரம்வரை கல்வி பயின்று இன்று கிளி/ முருகானந்தாக் கல்லூரியில் உயர்தரம் பயின்று வருகின்றார்.

இளவயதில் இருந்தே கல்வியிலும் விளையாட்டிலும் தடம்பதித் தவர். தேசிய மட்டம்வரை இவரது புகழ்பேசப்படுகிறது. பத்திரிகைகளிலும் வானொலியிலும் இவரது கவிதைகள் தவழ்கின்றன. இவரது முதலாவது கவிதைத் தொகுதியாக "ஒரு பூவின் மடல்" என்ற தொகுதி அமைகின்றது. இக் கவிதைகள் தனது 14வது வயதில் இருந்து 17வது வயதுவரை எழுதப்பட்டதாகும்.

06159

42/6 தொட்டியடி,
விசுவமடு,
முல்லைத்தீவு,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிளி/முருகானந்தா மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கல்வி பயிலும் செல்வி.ப.தனுஜா கவிதை நூல் வெளியிட உள்ளமையை பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகிறேன்.

செல்வி.ப.தனுஜா விளையாட்டுக்களில் சிறந்த வீராங்கனை என்பதனை வடக்கு மாகாணத்தில் தடம் பதித்துள்ளார். இளம் சமுதாயத்தினர் மத்தியில் எழுத்தாற்றலானது அருகிக்கொண்டு வரும் இன்றைய காலத்தில் மாணவி கவிதை நூல் வெளியிட உள்ளமை சிறப்பாகும்.

கலை வடிவங்கள் வேறுபட்டாலும், ஊற்றெடுக்கும் கலையை வெளிக்கொணர்வது உணர்வுகளே! எவனொருவன் உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்க முற்படுகிறானோ, அங்கே கலை பிறக்கிறது. இதனை உலகத்தார் புசிக்க வழிசமைப்பதில் பெரும்பாண்மையானோர் பின் நிற்கின்றனர். இதற்கு விடை காண முற்படுகையில் எஞ்சுவது கேள்விக்குறியே!

சிறுவர்கள் மத்தியில் படைப்பாற்றல் பெருகி வருவது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே, காரணம் எதிர்கால சந்ததியினர் மத்தியில் கலையுணர்வு துளிர்விட ஆரம்பித்துள்ளதேயாகும். மாணவர்களும் சரி, ஆசிரியர்கள், பெற்றோர்களும் சரி கலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் ஆர்வமற்றிருக்கிறார்கள். சான்றிதழை நோக்கிய கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து அதனை குழந்தைகள் மேல் திணிக்கிறார்கள். இதனால் மாணவர்கள் மத்தியில் இணைபாட விதானத்திற்குரிய ஆற்றல் புறந்தள்ளப்படுகிறது. வருங்காலத்தில் தொழில் வாய்ப்பை எங்கே இழந்துவிடுவோமா? என்கின்ற அச்சம் அவர்கள் மத்தியில் இழையோடிப்போயுள்ளமையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கல்வியலாளன் என்ற ஸ்தானத்தில் இருந்து கூறு கின்றேன். இவை மாணவர்களின் படைப்பாற்றலை நிச்சயமாக மழுங் கடிக்கும் செயலே. பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்கள் மத்தியில் படைப்பாற்றலை ஊக்குவிக்க முன்வர வேண்டும் என்று இம்மலரூடாக கேட்டுக்கொள்கிறேன்.

செல்வி.ப.தனுஜாவின் கவிதை மலர் சிறந்த வண்ணம் வெளி வரவும், மேலும் பல உயர்ந்த நிலைகளை இம்மாணவி பெற்று எமது வடக்கு மாகாணத்திற்கு பெருமை தேடித்தர வேண்டும். என்று கேட்டுக்கொள்வதோடு, மாணவியை ஊக்குவித்த பெற்றோர், மற்றும் பாடசாலைச் சமூகத்தை மலரூடாக பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

**திரு.த.குருகுலராசா,**
**கௌரவ.கல்வி பண்பாட்டலுவல்கள்**
**விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்**
**வடக்கு மாகாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சம் திறந்து வாழ்த்துகிறேன்

வன்னியின் வலிதெரிந்த குழந்தைக் கவி மகள் பங்கஜன் தனுஜாவின் ஓடு நதியின் கைவண்ணம் நூலுருப் பெறுவது கண்டு நெஞ்சம் திறந்து வாழ்த்துகிறேன். விவசாய பூமியான விசுவமடு மண்ணில் தவழ்ந்த இந்தப் புதுமைப் பெண்ணின் கவி வரிகள் ஆவணமாகுவது இளம் படைப்பாளிகள் யாவருக்கும் முன்னு தாரணமும், முனைப் பூக்கமுமாகும்.

மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதன்மை நிலை பெற்று தேசியம் வரை வன்னித் தமிழின் வலிமையினை முன்னேற்றிய எமதருமை இளவல் செல்வி "பங்கஜன் தனுஜா" வின் ஆர்வமும், படைப்பாற்றலும், திறமையும் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. பள்ளிக்காலம் வெறுமனே புத்தகங்களுடன் மட்டும் சுமந்துவிடாமல் இணைத்துறைகளில் பல படைபாற்றலும், விளை யாட்டுச் செயற்பாட்டிலும் தனக்கென ஓர் இடத்தை உறுதி செய்ய வேண்டும் என்கின்ற செய்தியை சக மாணவர்களிடம் பரப்பும் நல்ல குழந்தையாக தேவதையாக காண்கிறேன் நிற்காமல் தொடர வேண்டும் நின் எழுதுகோலுக்கும் தமிழுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் என்றென்றும்.

**வாழ்த்துக்களுடன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**முல்லைத்தீவு 0778060267**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

மருதமும், நெய்தலும் கைகோர்த்துச் சிரித்திடும் முல்லைத்தீவின் பெருநிலப் பரப்பில் அமைந்துள்ள கல்லூரியே விசுவமடு மகா வித்தியாலயமாகும். இப் பாடசாலைக்கும், இப் பிரதேசத்திற்கும் தனித்துவ முத்திரை பதிக்கும் வகையில் மாணவி செல்வி ப.தனுஜா அவர்கள் கல்வியே கண்ணாகக் கொண்டு "தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்" என்ற கூற்றுக்கமைவான தனது தேடலின் ஆளுமையை நிலைக்களனாகக் கொண்டு கவி விருந்தை "ஒரு பூவின் மடல்" என்ற தொகுப்பினூடாக வெளியிடுவது தமிழுலகிற்கு செப்பனிட்டு காட்டும் முயற்சியாகும். அவரது படைப்பாற்றல் தமிழினத்திற்கே பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

ஆளுமைமிக்க அதிபரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் ஆசிரியர்களின் உழைப்பின் பயனாகவும் இம் மாணவியின் தணியாத தாகத்தின் விளைவாகவும் வீறுநடை போட்டு பிரசவிக்கும் இக் கவிதைத் தொகுப்பு நனிசிறந்த செயற்றிறன் என்றே கூறலாம். தங்களது மகளின் திறனை இனங்கண்டு அதனை வழிப்படுத்தும் முயற்சியின் தம் பணி யினை முன்னெடுக்கும் பெற்றோரின் பங்களிப்பும் மிகை யாகாது. தமிழ் மொழிப்பற்று குறைந்து கொண்டு வரும் இக் காலகட்டத்தில் தனது தமிழ் ஆற்றலினால் புதுக்கவிதை அமைவில் கவித்துவம் பொங்கி வரும் வகையில் புலமையில் திளைத்து வெளியிடும் இக்கவிதைகள் சமூக நெருடல்கள், மனித அவலங்களை சுட்டிக்காட்டி மனித சிந்தனையை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இவரது கவிதைகள் ஒவ்வொன் றும் வாசகரது இதயங்களில் என்றென்றும் அசைபோடும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் பெறப்படும்" என்ற வாக்கினை உள்ளத்தில் நிறுத்தி புகழ் ஓங்கும் வகையில் இவரது கல்வித்துறை திகழ வேண்டும். இக்கவிதைத் தொகுப்போடு நின்று விடாது மீண்டும் பல தொகுப்புக்களைக் கொண்டு கவிதைத்துறை வெளிவர வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**வடமாகாண உதவிக் கல்விப்பணிப்பாளர்,**
**தமிழ்**
**திருமதி.கௌரி முகுந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

புற்றீசல்களாக இன்று பல்வேறுபட்ட படைப் பாளிகளும் படைப்புக்களும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இன்று உணர்வுகளின் பிரவாகமாக மட்டுமன்றி பரீட்சைகளிலும், நேர்முகப்பரீட்சை யிலும் புள்ளிகளை ஈட்டிவிட வேண்டும் என்ற நோக்கிலும் படைப்புக்கள் வெளிவருகின்றன. ஆனால் மாணவி செல்வி.ப.தனுஜா அவர்கள் இச் சிறுவயதில் தன் உணர்வுகளுக்கு வடிகால் கொடுத்து அதை கவிதை யாக்கியுள்ளார். கவிதை எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாது அதை நூலாக்கம் செய்து வெளியீடு செய்வது என்பதும் அவரது அசாத்திய மான திறமை என்றேதான் சொல்ல வேண்டும்.

செல்வி.தனுஜாவை ஊர் என்ற வகையிலும் பாடசாலை மாணவி என்ற ரீதியிலும் நன்கு அறிவேன். துடிப்பானவர்; கல்வியும் விளையாட்டும் அவரது இரண்டு கண்கள் என்றே கூறலாம். இளமைக் காலம்தொட்டு இன்றுவரை அவரது துடிப்பு கூடிக் கொண்டே செல்கின் றது. இவர் விளையாட்டில் தேசியம்வரை கால்கள் பதித்தவர் இன்றோ கவிதையிலும் தேசியம்வரை சென்றுள்ளார். அவரது கவிதை பற்றிய ஆளுமையை "ஒருபூவின் மடல்" என்ற கவிதைத் தொகுதியூடாகவும் தரிசிக்கலாம்.

சாதாரணமான செல்வி.தனுஜா இன்று ஊரறிந்த படைப்பாளி தனுஜாவாக திகழ்கின்றார். இச் சிறு பராயத்தில் இப்பெருமுயற்சி நாளை அவர் உயர்ந்த இடத்துக்குச் செல்வார் என்றே கட்டியம் கூறுகிறது. பெற்றோரால் ஆசிரியர்களால் அதிபர்களால் பெருமையடைந்த புகழடைந்த மாணவர்களைக் கண்டிருக்கிறோம். ஆனால் மாணவர் களால் பிள்ளைகளால் பெருமையடைந்த பெற்றோர்கள், ஆசிரியர் களும் உள்ளனர் என்பதற்கு தனுஜாவே இலக்கணமாகின்றார். அவரது இக்கன்னி முயற்சி தொடர வாழ்த்துகிறேன். கவிமழை தொடர்ந்து பொழியட்டும் உலகமே அதில் தொடர்ந்து நனையட்டும் வாழ்த்துக்கள்.

**திரு.பெ.பாலகிருஷ்ணன்**
**அதிபர்**
**மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

"உள்ளத்துள்ளது கவிதை" என்ற கூற்றிற்கு அமைவாக எமது பாடசாலையின் மாணவி செல்வி பங்கஜன் தனுஜா தனது உள்ளத்து உணர்வுகளை கவி வரிகளாக வடித்துள்ளார். இன்று இலக்கியம் படைப்பதில் எமது இளம் சந்ததியினர் ஆர்வம் குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலையிலும் சில இளம் படைப்பாளி கள் புதிய உத்வேகத்துடன் இலக்கியங்களைப் படைத்து வருகின்றனர். அந்தவகையில் எமது பாடசாலையில் முளைத்துவரும் இளந்தளிர் தனது கன்னிக் கவிகளின் தொகுப்பை "ஒரு பூவின் மடல்" என்ற நூலாக வெளியிடுவது எமது பிரதேசத்திற்கும், பாடசாலைக்கும் பெருமைக் குரியதாக அமைவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தனுஜா இலக்கியத் துறையில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் ஆர்வமுடைய ஒரு மாணவியாவார். கடந்த காலங்களில் மாகாண மட்ட தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் இவர் பெற்ற சான்றிதழ்கள் இதற்கு சான்று பகர்கின்றன. எனவே எதிர்காலத்தில் இம்மாணவி பல்துறை சார்ந்த ஆற்றல்களையும், ஆளுமையையும் கொண்டவராகத் திகழ்வார் என நம்புகின்றேன்.

"ஒரு பூவின் மடல்" என்ற கவிதைத் தொகுப்பைப் போல் மேலும் பல கவிதைத் தொகுப்புக்களை வெளியிடுவதற்கு ஏற்ற மன உறுதியையும் பார்வை விசாலிப்பையும், படைப்பாற்றலையும் வளர்த்து, எமது சமூகத்தின் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பல படைப்புக்களை எதிர்காலத்தில் தருகின்ற விருட்சமாகத் திகழ்வார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்து கின்றேன்.

**சி.மகேந்திரன்**
**அதிபர்**
**மு/விசுவமடு ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

எமது கல்லூரியில் க.பொ.த.உயர்தரம் கலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவி செல்வி.பங்கஜன் தனுஜா அவர்களது இம்முயற்சியை பாராட்டுகிறேன். இவர் ஊடகக் கற்கை நெறியை ஒரு பாடமாக எடுத்திருப்பதும் மாகாணமட்ட தமிழ்த்தின கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றமையும் முக்கியமானது “ஒரு பூவின் மடல்” எனும் கவிதை தொகுப்பை இந்த வயதில் கன்னி முயற்சியாக எழுதி வெளியிடுவது என்பது மிகவும் மெச்சத்தக்க முயற்சி என்பதுடன் எமது கல்லூரிக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இவரது கன்னிமுயற்சி மென்மேலும் சிறப்படையவும் மேலும் பல நூல்கள் வெளியிடவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**தி.வரதன்**
**அதிபர்**
**கிளி/முருகானந்தாகல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்கள் நடப்பதைவிட நடனமாடுவதையே விரும்புகின்றேன்...

உணர்வுகள் கட்டுக்கடங்காது நின்ற பொழுதெல்லாம் அதற்கு வடிகால் தேட முற்பட்ட பொழுது கவிதையே எனக்குத் துணையானது வீடு, பாடசாலை, கிராமம் என்ற குறுகிய வட்டத்துக்குள் உலாவந்த எனக்கு போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வும், முள்ளிவாய்க்காலில் முடங்கிப்போய் மூச்சு முட்ட கோரமான நிகழ்வுகளும் என்னை வெளி உலகிற்கு கொண்டுவந்தன. அன்று தொட்டு என்பேனா முனை வெள் ளைக் காகிதங்களைக் காணும் போதெல்லாம் ஏதேதோ வாசகங் களைக் கிறுக்கியது. பார்த்தவர்கள் அவையாவும் கவிதை என்றார்கள். எனக்கோ கவிதை என்றால் என்ன? என்பதே தெரியாத பருவம். ஏன்? இன்றுகூட கவிதைகள் பற்றிய முழுவட்டத்தையும் பார்வையையும் தெரிந்துகொண்டேனா? என்பது சந்தேகமே.

எனது கவிதைகளுக்கு குறிப்பாக உணர்வுகளுக்கும் வடிவங் களுக்கும் நான் வரையறை போட்டதில்லை மூன்று வரிகளுக்குள் என் உணர்வுகள் தீர்ந்தால் முடித்துக் கொள்வேன். இல்லை முந்நூறு வரிகள் தாண்டியும் முடியவில்லையாயின் அதற்கு கவலைப்படவும் மாட்டேன்.

நான் கவிதைகளைப் படைக்கும் தோறும் இக்கவிதைகள் நாளை வெளிவர வேண்டும். பலரும் வாசிக்கவேண்டும் என்று எண் ணியதில்லை எனக்கு ஆறுதல் வேண்டும் அதற்காகவே எழுதினேன். பாடசாலை மட்டத்தமிழ்த்தினப் போட்டியிலும் விழாக்களிலும் கவிதை களைப் படைக்கும்போது ஏற்படும் சந்தோசம் தான் இப் படைப்பு வெளிவரும் போதும் ஏற்படுகிறது. அவ்வளவுதான்... கவிதைத் தொகுப்பு வெளிவர என்னை கவிதையோடு அழைத்துச் சென்ற ஆசிரியர், திரு.க.முருகமூர்த்தி, திருமதி.யாழ்மொழி ஆசிரியர்களுக்கும், சூரியன் F.M.முகுந்தன் அண்ணா, மற்றும் கவிஞர்களுக்கும் இவர்கள் யாவற்றிலும் மேலான எனது பெற்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

P Thanya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06159

# 01 தமிழ் மகளின் வேண்டுகோள்

இவ்விரண்டு வருடம்தான் சென்றாலும்
இறக்கவில்லை எம் நினைவுகள்
இடித்தெறிந்த கட்டடங்களும்
இமையின் கண்களுக்கு சாட்சியல்லவா?

தெருத் தெருவாய்க் கிடக்கும் எலும்புத்துண்டுகளும்
புதைந்து கிடக்கும் உயிருள்ள குண்டுகளும்
மனிதனை இன்னும் வதைக்கிறது
பார்த்தாயா?

பிள்ளையை இழந்த பெற்றோரும்
பெற்றோரை இழந்த பிள்ளைகளும்
தெருத்தெருவாய் சுற்றியெல்லோ
தேடுகின்றார்

அகதி எனும் பெயரினிலே
அடிமையாக்கியது அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு எனும் பதவியிலே
அமைதியில்லாப் பிரச்சினையே!

நாடு கடத்திப் பழிவாங்கும்
வெட்கமற்ற விரோதியே!
தமிழரை வேரோடு பிடுங்கவா
ஊரோடு அலைகிறாய்!

இந்திய இராணுவம் வந்தாலும்
இழக்கமாட்டோம் எம்மினத்தை
கண்மூடித் திறப்பதற்குள்
சாதிப்போம் தமிழினமே!

முடியாட்சியைக் களைந்துவிட்டு
ஜனநாயகமாய் இருந்துவிடு
இனப்பாகுபாட்டை விட்டு
இணைந்து வாழப் பழகிக் கொள்

இன்றொடு நிறுத்திக் கொள்
இமை மூடிய கண்ணாய் இருக்காதே!
அரசாங்கமே! அரசியலை நிறுத்திவிடு
அடிமைகளை விட்டுவிடு
இணைந்து வாழப் பழகிக் கொள்

இதுவே தமிழ் மகளின்
நியதியும் உண்மையும்
நீயும் பூமியின் மகனாய்
வேண்டுகோளை ஏற்றுக் கொள்

(21.01.2013 அன்று அப்பாவி மக்களை அடியோடு ஒழித்த அரசாங்கத் தின் மீது கொண்ட கோபத்தால் எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 நீங்காத நினைவுகள்

போர் என்னும் போர்வையிலே
விடியவில்லை காலைப் பொழுதுகளும்...
நாட்கள் பல சென்றாலும்
ஞாபகங்கள் நினைவிழக்கவில்லை...

தார் போட்ட றோட்டினிலே
வாகனம் தான் பல சென்றாலும்
போர் செய்த விந்தைகளை
நீக்கவில்லை நினைவகங்கள்.

'சார்' போட்ட மாணவரும்
இருக்கவில்லை சொல்வதற்கு
பள்ளி பல மறைந்தாலும்
பல்லிகளோ மறையவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ஓடிய சாரதியும்
சாமியாராய் மாறிவிட்டான்.
குண்டுகள் செய்த பூஜையோ? என்னமோ!
நாட்டினிலே மக்கள் எல்லாம் சாமியார் வேடம் தான்.

ஏர் உழுத விவசாயியும்
ஏமாளியாய் நிற்கிறான்
நெல் விதைக்கும் நிலங்களும்
பிணம் விதைக்கும் நிலங்களா?

நீங்காத நினைவுகளை
நினைவகங்கள் நீக்கினால்
விலகுமா போர்வைகள்?
விடியுமா காலைகள்?

(2012.12.15 அன்று பத்திரிகைக்கு அனுப்புவதற்காக எழுதியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06159

## 03 என் அம்மா உனக்காக...

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

அன்புக்கு அடித்தளமாய்
அமைதிக்கு இலக்கணமாய்
உரிமைக்கு சொந்தமாய்
பண்பாளராய்...

அன்பாய் பண்பாய்
பாசமான தாயாய்!
உரிமையாய் எம்மை
வளர்த்தெடுத்தாய் அன்னையே!

தளராத மனதோடு
சுயநலம் அற்ற தாயே!
பொது நல எண்ணத்தோடு
பணி செய்தாய் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து விரலுக்கு காரணமாய்
குடும்பத்தில் ஐவராய் - விளங்கும்
வீடும் இன்று
கோயில் குல விளக்கே

சேயைக் கண்ணிமைபோல் காப்பவளே!
கடவுளை உம்மில் கண்டுவிட்டோம்
அன்பை அள்ளி இறைக்கின்றாய்
அதுவே அம்மாவென உணர்த்துகிறாய்.

கடவுள் தானோ நீ அம்மா
இன்னொரு ஜென்மம் பிறந்துவிட்டால்
உன்னில் பட்ட கடனை அடைக்க
மீண்டும் பிறப்பேன் உன் தாயாய்!

(2013.01.02 அன்று எழுதி வைத்த இந்தக் கவிதை தமிழ் F.M பொக்கிசம் நிகழ்ச்சியில் தவழவிட்டபோது அனைவரின் பாராட்டையும் பெற்றது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04 முல்லைக்கு ஓர் கடிதம்

முல்லை மண்ணிலே
கல்லை சிலையாக்கும்
எல்லையற்ற சிற்பிகள்
பல உள்ள போதும்

தன்னை உருக்கி
கண்ணைப் பறிக்கவைக்கும்
எண்ணற்ற கவிஞர்கள்
மண்ணில் உள்ள போதும்

முல்லை மண்ணே
நெல்லை விளைவிக்கும்
நல்லை மண்ணே
சொற்பனக் கவிகேளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மகள் இவள் உனக்கு
தன்னந்தனியாக வண்ணக் கவி எழுதும்
சின்னப் பிள்ளை இவள்
சிறுக சொல்வாள் இவள்...

எத்தனை உயிர்களை
ஏப்பம் விட்டுத் தின்றாய்!
யுத்தம் எனும் பெயரில்
யுவதிகளைத் தின்றாய்!

போர் எனும் பெயரில்
காவற் தெய்வங்களைத் தின்றாய்!
விபத்து எனும் பெயரில்
வீதியோரத்தில் கொன்றாய்!

காமம் எனும் பெயரில்
கண்ணீர் சிந்த வைத்தாய்
உன் பிள்ளை நாமென்று
என்றாவது நினைத்தாயா?

முல்லையே இனியும் வேண்டாம்
தொல்லையே எமக்கும் வேண்டாம்
இனியொரு விபத்தும் வேண்டாம்
வாழ எமக்கு வழி வேண்டும்

(2014.03.16 அன்று யுத்தம் முடிந்து வேதனை ஆறுவதற்குள் முல்லையிலே உயிர்கள் பல விபத்தாலும் காம வெறியர்களாலும் காவு கொள்ளப்படுகிறன என்பதை ஊடங்கங்களூடாக அறிந்த பின்பு எழுதியது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 பிரிவின் வலி

அதிகாலை எழுந்து
அவசரமாய் வெளிக்கிட்டு
திட்டுவாங்கிடாமல் தப்பிடவே
வேகமாய்ப் புறப்பட்டு
மைதானத்தை முத்தமிட்டு
தொடங்கிய அந்தப்
பயிற்சி நாட்களில்
புரியவில்லை ஆசான்
உம் அருமை

புரியும் பாசம்
பிரியும் போது
தெரியுமென்பது உண்மைதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரதேசம் அழைத்துச் செல்கையில்
தூங்கிடாமல் எமைக்காத்து
தோற்றால் கூட எனைத் தேற்றி
அடுத்த ஆண்டு வெல்வோமென சொல்வீரே!

சாதாரணமாய் இருந்த எனை
ஊக்கத்துடன் பயிற்சியளித்து
மாகாண ரீதியில் தனு என்ற
தடம் பதிக்க வித்திட்டவரே!

விதி தந்த சாபம்
இடம் மாற்ற வைத்தது
வேறு இடம் சென்றாலும்
வெல்லும் வரை விளையாடுவோம் உமக்காக

**(பிரியமுள்ள உடற்கல்வி ஆசிரியர் திரு.த.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இடமாற்றம் வந்ததையிட்டு அவரை பிரிய மனமில்லாமல் எண்ணி கவலையடைந்து எழுதியது. பொக்கிசத்தில் கலந்த போது முகுந்தன் அண்ணாவின் வார்த்தைகள் - பிரிவு என்பது அனை வருக்கும் வருவது அவருக்காக நீங்கள் சாதிப்பது அது உயர் பாராட்டு)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06 வைரமுத்துவும் நானும்...

வைரமுத்துவே!
உம்மோடு ஒப்பிட
உரிமை எனக்கேது?
உன் போல் உயர்ந்திட
எனக்கு வழியேது?

உம் வைர வரியெற்கே?
என் சிறு வசனமெங்கே?

உம் கவி உயிரோடு கலக்கிறது
என் வரி உம் கவியோடு இணைய
வரம் கேட்கிறது

நீரோ கவியின் தந்தை
நானொரு கவியின் அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் வசனங்கள் ஒவ்வொன்றும்
வைரம் பாய்கிறது
என் வரிகள் ஒவ்வொன்றும்
உன்னிடம்
கருக் கேட்கிறது

வைர மனம் படைக்காத
வைர வரி படைக்கும்
வைர முத்துவே
நான் கவி எழுத
கவிக்கரு தரவேண்டும்

(2013.03.15 அன்று வைரமுத்துவின் நூலைப் படித்துவிட்டு எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07 இது தான் பெண்ணியம்

மானிடா!
உன்னை என்னவென்று சொல்வேன்

முகத்துக்கு முறுவல் காட்டி
முதுகுக்கு முனகல் காட்டி
உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசும்
புன்மையாளனே!
தாயும் தாரமும்
மென்மையும் பெண்மையும்
ஒன்றென்று உணராது
வன்மை காட்டியவனே!

பெண்களை நம் முன்னோர்கள்
மானென்றும் மயிலென்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிக்கொழுந்தென்றும்
மரியாதை சொன்னார்கள்.

கனவுகளால் கோட்டை கட்டி
கற்பனையால் காவலிட்டு
காதல் எனும் உணர்வினுக்கு
கருக்கொடுத்து வாழ்விற்கு
உருக்கொடுத்தார்கள்.
பாவையவள் கருவிழிக்கும்
தோகையவள் கூந்தலுக்கும்
நலிந்த இடைக்கும்
நலியாத தொடைக்கும்
மலிந்த மார்புக்கும்
ஆயிரமாயிரம் - அர்த்த
உவமைகள் சொன்னார்கள்

அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கென்று
இனியும் இனியும் கூறிவிடாதே!
பெண்கள் இன்றும் அடுப்பூதியிருந்தால்
ஒரு அன்னை திரேசாவை
ஒரு கல்ப்பனா சௌலாவை - ஏன்
நம் நாட்டு சுசந்திகாவை
உலகம் கண்டிருக்குமா?

பெண்ணைப் படைத்த
இறைவன் ஏன்
கண்ணைப் படைத்தான்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தைப் படைத்த
இறைவன் ஏன்
உணர்வைப் படைத்தான்
பெண்ணையும் படைத்து
கண்ணையும் படைத்து
கூடவே காதலையும் படைத்தது
வாழ்வதற்குத்தான்

வானமே கூரையாக
முகத்திற்கு முக்காடிட்டு
விழி பிதுங்கி
மொழி விழுங்கி
வாழ்க்கையினைத் தொலைத்து
ஏக்கத்தோடு நிற்கும் பெண்மைக்கும்
உணர்வுக்கும்
மதிப்புக்கும்
வாழ்க்கை கொடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08 தேன் கூட்டில் ஒரு வீடு...

தேன் கூட்டில் ஒரு வீடு
அழகான சிறு கூடு
தொங்குது பார்
விசுவமடுப் பள்ளிக்கு முன்னாலே

பாசத்தின் தேன்மொழியாய்
அன்பின் வதிவிடமாய்
விளங்கும் சிறு கூட்டில்
மொய்க்கிற குளவிகள்

அழகான சிறுகூட்டில்
அன்பிற்கு இலக்கணமும்
பண்பிற்கு இலக்கியமும்
வகுத்துவிட்டது தேன்கூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான அக்கூட்டில்
ஐவர் தாம் தேனீக்களே
வாருங்கள் நண்பர்களே
பாருங்கள் சிறு கூட்டையே

இதுவே எம் கூட்டின்
அழகான கதையெல்லோ
கேட்டீரோ எம் கதையை
நடப்பீரோ எம்போல

(03.08.2015 **அன்று எழுதி பொக்கிசம் நிகழ்ச்சியில் தவழவிட்ட கவிதை**)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 பெரிதாய் பெண்ணியம் பேசாதே

உள்ளதெலாம்
தொலைந்து விட்டு
ஊர்விட்டு ஓடிவந்த
மதியே! கன்னி ரதியே!
உலகத்து ஊசலில்
உயிரோடு மாட்டிவிட்டாய்

அன்று நீ!
பெரிதாய் பெண்ணியம்
பேசினாய்
சதி செய்யும் காமுகர்களும்
விதி தந்த அடக்கமும்
இனி வரும் காலம்
நிலைக்காதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நீ!
ஊர் விட்டு ஓடி வந்து
உயிர் ஒன்றை உருவாக்க
உன்னையே உருக்குகிறாய்
கச்சிதமாய் சிக்கி
நீயே உன்னை
மாட்டி விட்டு
விதியைக் குற்றம் கூறி
வீதியில் அலைந்து
என்ன பயன்?

பேசும் பெண்ணியத்தை விட
வாழும் பெண்ணியமே நிலைக்கும்
மதி உனக்கு;
மதி போன்ற முகத்தை - தந்தது
விதி என்றால் - அந்தப் பிரம்மனுக்கு
நீ செய்வது விதியா? - இல்லை
பெண்ணியத்தின் பேரில் செய்யும் சதியா?

**(29.03.2015 அன்று வெளியான கவிதை அத்தோடு பொக்கிசத்தில் பதி.விதி.சதி என்ற தலைப்பின் போது வாசித்த கவிதை இது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 மறைந்தவரின் மறையாத கற்பனைகள்

மதி போன்ற முகத்தோடு
மனிதருக்கு சாட்சியாய்
மலரெனப் பூத்த
மன்மத வசந்தாவே!

மகத்தான வாழ்வுக்கு
வழிகாட்டியவள் நீங்களன்றோ?
கல்விக்கு வித்திட்டு
கரைசேர வைத்தாயே!

சொல்லெனப் பூத்து
புன் சிரிப்போடு மலர்ந்து
கற்கைக்கு வழிகாட்டிய
நல் ஆசிரியையே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தேவிகளாய் விளங்கும்
ஆசிரியை நீங்களன்றோ
மும்மகளைப் பெற்றெடுத்தாய்
முடிவில்லை உன் நினைவுகள்

"கல்வி" எனும் மூவெழுத்திற்கு
ஆதாரமாய் உன் மகள்மாரை
வளர்த்தெடுத்தாய் ஆசிரியையே!
உன் நினைவு நீங்காதே!

சிதைந்தன உன் கற்பனைகள்
அழிந்தன குடும்பங்கள்
கனவுகளைக் கலைத்திட்டாய்!
கற்பனையை தகர்த்திட்டாய்!

நீ ஒன்றை மட்டும் விட்டுச் சென்றாய்
என்னவென்று என் இதயம் சொல்கிறது
அதுதானே என்னிடமுள்ள உன் நினைவுகள்
உன் நினைவு மாறாது என் உயிர் இருக்கும்வரை

**(போரின் போது கடைசிவரை கூட இருந்த நண்பி பர்மிகாவும் சகோதரர்களான சர்மிகா, நிர்மிகா மற்றும் நல் ஆசிரியை வசந்தராணியையும் கொத்துக் குண்டு காவுகொண்டதை எண்ணி கலங்கி 01.21.2013 அன்று எழுதியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 அண்ணனின் அன்புக்காக...

அண்ணன் இல்லா ஏக்கத்தை
அந்திமாலை அறிவித்தது

அன்று ஒரு நாள்
ஆல மரத்தடியில் உட்கார்ந்த போது
சிறிதாய் ஒரு கற்பனை

அது கனவா? கற்பனையா?
அன்புக்காய் ஏங்கும் தங்கையிவளின் தவிப்பு
ஆற்றிலே தோன்றிய
ஆலமர விம்பத்தைப் பார்த்து
அண்ணா என்றேன்.

தங்கை இவளைத் தண்டிக்க
ஆசையாக் கண்டிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனாய் வரும் வரை
ஆவலாய்க் காத்திருப்பேன்

அண்ணா நீ!
நிஜத்தில் வரும்வரை
கனவுத் தங்கையாய் - உன்
காலடியில் கற்பனையாய்க் காத்திருப்பேன்

**(2014.03.16 அன்று தன் அண்ணா பற்றி நண்பர்கள் கதைக்கும் போது எனக்கும் ஒரு அண்ணன் இருந்திருந்தால் என்று கலங்கிய போது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 என் அப்பா...

ஈரெட்டு வருடங்கள்
இனிதே முடிந்தாலும்
இனிதாய் கவி சொல்ல
கவி வரியில் - என்
அப்பாவை அழைக்கிறேன்.

அப்பா...
பச்சிளம் பிஞ்சிலே
பாலகி என்னை
நெஞ்சிலே சமந்த வேளை
மெத்தையாய் எண்ணி
குதித்து விளையாடிய வலிகள்
உமக்குத் தெரியவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா... என்று
ஆசையாய் அழைக்கும் போதெலாம்
அம்மாவுக்கு நிகராய்
அன்பு காட்டியவரே!
எமைக் குறைவிலாமல்
என்றுமே வளர்ப்பவரே!
அன்று நான் உமக்குத் தந்த
அழியாத காயங்கள்
உமக்கு மறந்தாலும்
எனக்கு நினைவிருக்கு!

களிப்பாய் எம்முடன் பழகி
துடிப்பாய் எமை இயங்க வைத்து
பண்பாய் வளர்க்கும்
அன்பான அப்பாவே!
உமைக் கடவுளாய் எண்ணி
இருகரம் கூப்புகிறோம்
தினம் பல பிரார்த்தனை
உமக்காக செய்திடுவோம்

(தந்தையர் தினத்துக்காக வானொலியில் வாசிப்பதற்காக எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 விட்டில்ப்பூச்சியல்ல

ஈராய்ந்து மாதம் சுமந்து
இணையாத பாசம் வைத்து
இமையின் கண்களுக்கு சாட்சியாய்
ஈன்றெடுக்கிறாள் பெண்

ஈன்றெடுக்கும் குழந்தை
ஆணா? பெண்ணா?
சந்தேகிக்கிறான் கணவன்
இது என்ன நியாயம்?

பெண்ணென்றால் கொலையும்
ஆணென்றால் கொள்ளையும்
கொள்கிறானே காரணம் என்ன?
சீதனப் பிரச்சினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம் வாங்கிவிட்டு - மனையாளுடன்
உறவாடுகையில் தெரியவில்லை
சீதனம் இவனுக்கும் - இப்போ
தனக்குப் பெண் சேய் என்றவுடன் ஏங்குகிறான்

சீதன விளக்குச் சுவாலையில் வீழ்ந்து
வெந்து மடியும் - விட்டில்ப் பூச்சி
பெண்களா நாம்? - இனியும்
இப்படி இருக்கமாட்டோம்

சுவாலையின் சொந்தக்கார ஆண்களே!
நீங்களும் கவனம்!
ஏனெனில் நீங்களும் அணையலாம்
அதையும் கவனத்திற் கொள்ளுங்கள்

(சீதனம் கேட்டு சித்திரவதை செய்யும் ஆண்களுக்காக எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 வலிக்கிறது மனம்

கால்களோ வலிக்கவில்லை
மனம் தானே வலிக்கிறது
ஆசானின் அன்பு குறையா ஏச்சு
அழவும் வைத்துவிட்டது.

யூனிய நஷினல் எனும் பெயரில்
கொழும்புக்குச் சென்றிருந்தோம்.
எட்டு நாள் தங்கியிருந்து
மாற்றான் வீட்டில் சாப்பிட்டு
தூக்கமும் அங்கே வைத்தோம்.
காலை எழுந்ததும் படபடப்பு
ஓடத் தொடங்கியவுடன் பயக்காய்ச்சல்

தெரிவுப் போட்டி தொடங்கியதும்
தெரியாமல் வென்றேன் முதலிடம்.
தெரிவித்தார் ஆசான் எனக்கு நல்வாழ்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிறுதி வெல்வேனென
ஆவலாய்க் காத்திருந்த
ஆசானுக்கு கிடைத்ததோ
அதிர்ச்சி!

இரண்டாமிடம் வந்து
இறுதிக்குத் தெரிவாகி
எட்டுப்பேருடன்
நான்காம் சுவட்டில்
நடுங்கியபடி நின்றேன்.
வேற்று மொழியிலே
குறிப்புக்குச் செல் என்றார்
மீண்டும் ஆயத்தம் சொல்லி
வெடியொலி வைத்தார்.

முதலிடம் வந்து இறுதியில்
நான்காமிடம் வந்ததன் பின்னர்
ஆசானின் அன்பு குறையா ஏச்சு
அழ வைத்தது என்னை...

வெல்வேனென சத்தியம் செய்தது உண்மை
ஆசானுக்கு ஏமாற்றம் கொடுத்தது என்ன?
நம்பிக்கை என் கையில்
வானமும் ஒரு நாள் வசப்படும்
வெண்ணிலவும் தலைவணங்கும்
என் வெற்றி கண்டு

**(05.27.2013 அகில இலங்கை ரீதியில் வருடம் தோறும் நடத்தப் படும் போட்டியில் 105பேர் ஓடி அதற்குள் 4ம் இடம் வந்ததும் 1ம் இடம் வருவேன எதிர்பார்த்த முகுந்தன் ஆசிரியருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது ஆழ்ந்த கவலையை அளித்த போது எழுதியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வானத்துடன் சில மணி நேரம்

பௌர்ணமி நாளில்
மணலில் சாய்ந்த போது
வானைப் பார்த்து மெதுவாய்
ஓர் கற்பனை...

வானம் என் கல்லூரியாய்
இருக்கக் கூடாதா என்று
என் கற்பனை
அதற்கும் விளங்கியது போலும்

என்னைப் பார்த்து
நான் கல்லூரியாய் இருக்கலாம்
நிலவு ஆசானாய் இருக்கலாம்
விடியலுக்காக
விண்மீனைப் போல் நண்பன்
தேடிவிடாதே என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயத்தேன்
அந்த வானமா? இப்படி
அறிவுரை சொல்வதென்று
அடுத்த நொடியே
அடுக்கினேன் வினாவை!
அப்படி சொல்வதன்
காரணமென்ன?

அடுக்கியது
அடுக்கடுக்காய் விடைகளை
கண்ணுக்குத் தெரியாமல் - பகலில்
கண்சிமிட்டும் விண்மீனும்
காரணமில்லாமல் மாட்டிவிடும்
நண்பனும் ஒன்றென்றுணர்!

வானத்திலிருந்து - ஓர் நாள்
வால் வெள்ளி விழும்
அதைப் பார்த்து
விண்மீன் புன்சிரிக்கும்;
உன் பாதை ஒரு நாள்
தடுமாறும் - அதைப்பார்த்து
உன் கூட்டம் பல் இளிக்கும்
அதுவல்ல நட்பு
ஆயிரம் ஆண்டுகள்
அழியாமல் இருந்து
உன் புகழ் சீர் தூக்க
தன் தூக்கம் கெடுப்பவனே
நண்பன்

வானைப் போல்
நிலையாய் இருக்கும் நட்பு
நிர்வாணமானதாய் சாட்சியில்லை.

**(என் நட்பை பற்றி சிந்தித்தபோது 2014.06.18 அன்று எழுதியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ஆசானே நீர் வாழ்க

ஆறுமணி நேரம் தனை
அக்கறையுடன் நீரெடுத்து
"அ" முதல்
அகில உலகம் தாண்டும் வரை
அன்பு அன்னைக்கு நிகராய்
ஆசானாய் உடனிருந்து
மூவாறு வருடங்கள்
முழு மூச்சாய்க் கற்பிக்கும்
உத்தமனே!

எங்கள் ஆசானே!
நீங்கள் பல்லாண்டு காலம்
நீடுழி வாழ்வீர்!

(2013.11.10 அன்று ஆசிரிய சேவை கண்டு வியந்து எழுதியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 நான் யார்?

"நான் யார்? என்பது
எனக்கே தெரியவில்லை

உரத்துச் சொல்கிறேன்
என் பெயரை
இதன் வரியில் சொல்கிறேன்
என்னை ஊமையாக்கிவிட்டு!

என் கண்களுக்குத் தெரியும்
என் வாழ்வு எப்படியானதென்று...

என் கால்களுக்குத் தெரியும்
நான் செல்லும் வழி எங்கேயென்று...

என் உணர்வுகளுக்குத் தெரியும்
என் கதை தொடருமென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஓட்டப் பந்தயத்தில்
ஓடவிட்டு தோள் மீது ஏறிக்கொள்ளும்
வேதாள நண்பர்களையும்,
நடக்கவிட்டு
நச்சென்று குத்தும்
நாதாரிகளையும் நம்பமுடியவில்லை.

என்னமோ தெரியவில்லை
கல்லூரியில் நான் மாறுவேடம் பூண்டதில்லை
அதனால்தான் என்னமோ
இவர்கள் போடும் வேடத்தைப்
புரிந்து என்னை யார் என்று
கண்டுபிடிக்கவில்லை.

(2014.07.19 அன்று ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தபோது எழுதியது)

[பொக்கிசத்தில் கலந்தது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 உருகும் பெண்

மெழுகுவர்த்தி பேசுகிறது
அவளே பெண்
உருகுவது அவளல்லவா!
தன் திரிக்கரு சிதைவதை எண்ணியே
அவள் மனம் அழுகிறது

சூரியனே,
உருகும் மெழுகுவர்த்தியை
ஏன் உன் உதிக்கும் கரங்களால்
உருக்குகிறாய்?
இப் பெண்கள் படும்பாடு
போதாதென்றோ?

எதை எழுதினாலும்
என் பேனா மை கசிவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ கசிகிறது
பெண்களின் அவலநிலை கண்டு

தினம் பெண்களுக்குத்
தேய்பிறை என்றால்
விடிவு என்ற ஒன்று எதற்கு?

இந்தப் பெண்ணை
கலங்கரை விளக்காய்க் கருதி
விட்டில் என
முட்டி மோத வேண்டாம்.

இங்கே வடிவது கண்ணீரல்ல
பெண்களின் எழுச்சி வெள்ளோட்டம்
ஓ! அது எழுச்சி வெள்ளோட்டம்?
இல்லை இல்லை - அது
புரட்சிக் கண்ணோட்டம்

(2014.07.23 அன்று எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 நம்பிக்கை

நம்பிக்கை நார் மட்டும்
நம் கையில் இருந்தால்...

உதிர்ந்த இதழ்களும்
ஒவ்வொன்றாய்
ஒட்டிக் கொள்ளும்

வீசிய காற்றும்
தென்றலாய்த்
தான் வீசும்

கொட்டிய மழையும்
ஒவ்வொன்றாய்
மெட்டிசைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கெழுதும்
மடல்களெல்லாம்
மடிக்கவிகள் ஆகிவிடும்

நம்பியிருந்தால்
நம் வாழ்க்கை
உயர்ந்திடும்

நாள்தோறும் நம்பிக்கை
ஆலமரம் போலிருந்தால்
நன்றாக ஊன்றி வளரும்
நம் வாழ்வும் கூடவே

(2014.07.24 அன்று எழுதியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 வித்தியாவுக்காய் வீறுகொண்டோம்

கண்ணைக் கண்டு
கயலோ வேல் விழி என்றீர்
எம் குழலை முகில் என்றீர்
நுதலைப் பிறை என்றீர்
தாமரையொத்த தனம் என்றீர்
உடுக்கை ஒத்த இடை என்றீர்
வாழைத் தண்டை ஒத்த தொடை என்றீர்
மதியை ஒத்த முகம் என்றீர்

குயிலின் குரல்
மயிலின் சாயல்
மானின் மருளல் என்று
எத்தனை உவமைகளை
பொய்யாய் மெய் காட்டி
கவி இயற்றிக்
கவிஞனானீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலின் வாடல் கண்டு
அவளின் சீரழிவு கண்டு
மெய்யாக் கவியாய் வடித்து
எடுத்துரைத்த வரலாறுண்டோ
கவிஞனே!
கண்ணுக்கு மையழகு
கவிதைக்குப் பொய்யழகு என்பது
உண்மை தான் - இருந்தும்
மெய் சொல்லாப்
பொய்யொன்றும் மெய்சிலிர்த்ததில்லை
மெய்யை எழுதுகிறேன்...
மெய்யாய் எழுகிறேன்...

புதிதாய்ப் பூத்த
புங்குடு தீவுப் பிஞ்சை
கதறக் கதற
காட்டுமிராண்டித் தனமாய்
கடித்துக் குதறிய கயவனைப்பற்றி
தூற்றி பாடியதுண்டா கவிஞனே?

அன்று விபூசிகா
இன்று வித்தியா
நாளை யாரென்ற
ஏக்கத்தில் பதறுகிறது மனம்!

மதி என்று சொன்ன வதனத்தை
வதைத்த காமனை உதைத்துவிடு
பிறை என்று சொன்ன நுதலை
பிய்த்தெறிந்த கயவனை பிய்த்தெறிந்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கும் சங்கு எம் கழுத்தென்பதை
வாயால் குதறியவனை
கதறக் கதற வெட்டுங்கள்

சட்டத்தை ஆளும்
சட்டத்தரணி கூட
சல்லிக்கு மண்டியிட்டால்
சட்டம் கூட சளைத்துவிடும்

நீதி தேவதையே
நீ கண்ணைக் கட்டியிருப்பது
இதற்குத் தானா?
எத்தனை கதறல்கள்
இக் கண்ணீருக்கு
கடல் கூட மண்டியிடும்
நீதி வேண்டும் நீதி வேண்டுமெனக் கேட்டு
களைத்து விட்டோம்
சட்டத்தை நம் கையில் எடுத்து
உரிக்கும் வரை
விலகாது எம் துயர்
அகலாது எம் போராட்டம்...

காலம் கைகொடுக்கவில்லையென
அஞ்சப் போவதில்லை
கயவர்கள் அழியுமட்டும்
காக்கப் போவதில்லை
கயவர்களை அடியோடு ஒழித்து
அம் மண்ணிற்கு உரமாக்கும் வரை!

(2015.05.19 அன்று வித்தியாவை காமுகர்கள் காவு கொண்ட போது எண்ணிக் கலங்கிய போது எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 மே 18

மகிழ ஒரு பண்டிகையென்றால்
அழவும் ஒரு பண்டிகை எமக்காக வந்திருந்தது

மண்ணிலிடும் கோலத்திற்குப் பதிலாக
சிந்தும் ரத்தங்கள் கோலமாகின
கொழுத்தும் பட்டாசுகளுக்குப் பதிலாக
வெடிக்கும் பொங்கலுக்குப் பதிலாக
மனித வலுக்கள் மங்கலாகிப் போயின

நெல்லை விதைப்பதற்குப் பதிலாக
உடல்களை விதைந்திருந்தோம்;
பிஞ்சு மழலைகள் சத்தம் ஓய்ந்தன:
குட்டி தேவதைகள் நடமாட்டம் குறைந்தன:

முலையை இழந்த தாய்
மழலைக்குப் பால் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதவித்து நின்றதும்
உடல் ஊனமாய்
குற்றுயிராய்க் கிடந்த மனிதனும்
கண்ணெதிரே காயம்பட்டு
மடிந்து போகும் தாரமும்
எத்தனை தாலிகள்
மண்ணுக்கு உரமாய்....
மடிவைத்த குழந்தை
மண்ணோடு மண்ணாய்....

ஒரு காரணம் சொல்லித்
திருநாளென்றால்
பல காரணத்துடன்
கரிநாள் வந்தது
தமிழனைத் தேடி....
கண்ணீர் வற்றி
இரத்தம் கட்டி
மரத்துப் போயிருந்தோம்.

அழுவதற்கு சக்தியில்லை....
சிறுசுகளின் சத்தங்களை
மேய்ந்து சென்றன மே 18
பல்லாயிரம் மக்களின்
பாவ உயிர்களை
உறிஞ்சிச் சென்றது மே 18

தைத்திருநாளில் பொங்கலிட்டோம்
சித்திரையில் சிரித்திருந்தோம்
தீபாவளிக்கும் பூத்திருந்தோம்
இழந்த இளைஞர்களுக்கும்
மடிந்த மனிதர்களுக்கும்
அழிந்த சிசுக்களுக்கும்
தீபமேற்றுகிறோம் மே 18ல்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக கண்ணீர் சொரிவதற்கு
எம்மிடம் கண்ணீரில்லை
உனக்காக
உதிரத்தைக் காணிக்கையாக்குகிறோம்
மே பதினெட்டே!

(2015.05.15 அன்று மே 18 நினைவு நாளுக்காக எழுதியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 ஒரு பூவின் மடல்

எனது அன்பிற்கும்
என்மீது அன்பிற்குரியவர்களுக்கும்,

என் வாழ்வு
இப்படித்தான் முடியும் என்று
முன்பே அறிந்திருந்தால்...
தாயின் கர்ப்பத்திலேயே
என் முடிவை
நானே எழுதியிருப்பேன்...

பறக்கும் சிட்டென
தொடர்ந்தது என்வாழ்வு...
பள்ளியில் படிப்பும்
வெளியில் விளையாட்டும்
நண்பிகளுடன்
நாளாந்தம் அரட்டையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் விழாவும்
குதூகலமும்
என்றிருந்தேனே

கண்ணாடி முன் நின்று
என் அழகை
நானே ரசித்து
பெருமைப்பட்ட
நாள்கள் எத்தனை...

அன்றும்
வெள்ளை உடை உடுத்தி
வெண்புறாவென
வெளிக்கிளம்பினேன்...

அம்மா என்றும்போல் அன்றும்
வழியனுப்பி வைத்தாள்
அதுதான் இறுதிவிடை
என அவளுக்குத் தெரியாது

என்னைத்தொட்டு
தழுவும் தென்றலே
என்வாழ்வு இன்றோடு
முடியும்என்று ஏன் உரைக்கவில்லை?
நான் அளைந்து விளையாடிய
மண்ணே ! ...
என் மரணத்தை நீயும் அறியாயோ?
இறைவா!
உன்னைத் தினம் தினம்
கையெடுத்து தொழுதேனே
நீயும் கைவிட்டுவிட்டாயே!
நான் கற்ற கல்வியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் துடிப்பும்
என்னுள் இருந்த வீரமும்
புத்தியும்
ஏனோ என்னோடு
துணைவரவில்லை...

கழிப்பறையில் பிறந்தவர்கள்...
என் உடலை
வெறும் ஜடத்தை
சீச்சீ......
நான் கத்திகுளறி
அழுதுவிடக் கூட
அனுமதிக்கவில்லை
கசாப்புக் கடைக்காரன்
ஆட்டையோ, மாட்டையோ
கொல்லுகையில் கூட
உயிர் பிரிகையில் அது
ஓலமிட்டு கத்திட தடுப்பதில்லை
நானோ ஆடு மாட்டைவிட
கேவலமானேன்...

மானிடா ! ...
இனியும் உனக்கேன்
மறைப்பு
ஆடைகளைக் களைந்து எறி
அம்மணமாய்த்திரி
கழிப்பறைக்கு
தடுப்புச் சுவர் எதற்கு?
தாயென்றும்
தங்கையென்றும்
ஏன் பேதம் பார்க்கிறாய்
அவர்களும் பெண் தானே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோடும் நீ
உன் காமத்தை
தீர்த்துக்கொள்...

என்பிரிவால்
தாயும், தங்கையும்
அண்ணனும் மட்டுமன்றி
எனக்காக
ஊரே,
உலகமே ஓலமிட்டதைக்
கண்டேன்...
ஓலமிடுதல் தானே
தமிழர்கள் வழக்கம்
அன்று
கிரிஷாந்திக்காய்
இன்று
வித்தியாவுக்காய்

நீதி கிடைக்குமா?
கிடைக்கலாம்...
ஆனால்
நான் பட்டதுயர்
அழுத்திய வேதனை
அணுவணுவாகப் பிரிந்த
உயிர்
ஒட்டு மொத்தமான
என்கனவு
என் வாழ்வு
என்ன பதில்...?

என்னோடு
முடிந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் மாறாதவரை
தமிழர் பண்பாடு பேணதாவரை
பயிர்களிலிருந்து
களைகள் அகற்றப்படாதவரை
நல்லதொரு வழிகாட்டி
மக்களிடம் மீண்டும் தோன்றாதவரை
எம்மை நாமே...
எல்லாம் நாமே...
என்று தோன்றாதவரை
இன்னும் பல வித்தியாக்கள்
தோன்றியபடியே இருப்பர்
இது உண்மை...

இப்படிக்கு
வித்தியா

**(அன்று மறைந்த சகோதரி வித்தியாவுக்காக வித்தியாவாக நின்று எழுதியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 கல்வி

கலை என்னும் வடிவிலே
கல்வி எனும் பெயரிலே
எமை ஆட்டிப் படைக்கும்
கல்விக்கு கோடி மதிப்பு

## விளையாட்டு

விளை நிலப் பூமியிலே
சின்னஞ் சிறுசுகளைக்
களிக்க வைக்கும்
கன்னித் தாயவளே
விளையாட்டு!

## கவிதை

உணர்ச்சியின் வடிவமும்
உண்மையின் ததும்பலும்
உணர்வு பூர்வமாய்
தங்கியிருப்பதே கவிதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 அடைக்கலங்கள்

முதல் மூன்று வயது வரை அம்மாவின் மடி
அடைக்கலம்
முன்பிள்ளைப் பருவ்வரை முன்பள்ளி
அடைக்கலம்
முணு முணுத்துக் கழிக்கின்ற ஆரம்பப்பள்ளி
அடைக்கலம்
முக்காடு போடும் காலத்தில் கல்லூரி
அடைக்கலம்
பெண் பிள்ளையென்றால் பின் புகுந்தவீடு
அடைக்கலம்
பின்னர் என்ன? யாவரும் போல் மயானம் தான்
இறுதி அடைக்கலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 அற்புத கனவு...

எனக்கு மட்டும்
சொந்தமான உலகமது
நிஜத்தில் செய்ய
மறப்பதெல்லாம்
நினைவுக்கு கனவில்
தர மறுப்பதில்லை
அழகிய சொந்த
அண்டம் அது
அழகாய் வடித்த
கோலம் அது
முயற்சி செய்ய
நினைப்பதெல்லாம்
முனைவுக் கனவு வரை
வந்து செல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடவோ ஆடவோ
எனக்குத் தெரியாது
ஆனால் அழகிய
அண்டக் கனவில்
வருவதெல்லாம்
தேசிய பாடகி
நடனமாதுவாய்த்தான்.

காரணம் தேடினால்
விளையாட்டு வீராங்கனையாய்
விளையாடத் தெரியாததால்
அற்புத கனவு.

ஒன்றல்ல இரண்டல்ல
முந்நூறு இராத்திரிகள்
எனக்கென உருவான
அழகான அண்டத்தில்
எனக்கு மட்டும்
அனுமதியுடன் கூடவே
வெற்றியும் இலவசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 பருவ வயதில்

அழகிய பருவமது
அம்சமாய்த் தெரியுமது
வெண்பனிச் சாரலும்
மெல்லிசைத் தூறலும்
துள்ளிசைக் காற்றும்
சேர்ந்தே அணைப்பது போல்
ஓர் உணர்வு

மாரிச் சாரலில்
இரண்டாம் வாரத்தில்
பள்ளிப் பருவம் முதல்
பதினெண் வயது வரை
கட்டியிளுக்கும் கயிறு அது

காதலிக்க வயதிருக்கு
கற்பனைக்கு அளவிருக்கு
கனவுக்கொரு முடிவிருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனைக்கும் எல்லையிருக்கு
கடந்து விட்டால் சுகம்
சிக்கிவிட்டால் கஸ்ரம்

ஈராறில் தொடங்கி
முவாறில் முடியும் காதல்
பருவக் காதல்
அதைக் கடந்து விட்டால்
வருமே பெற்றோரின்
பாசக் காதல்

காதல் செய்வதில் தப்பில்லை
கற்கும் வயதில்
கல்வியைக் காதலிக்கா விட்டால்'
நாளைய சோற்றுக்கு
உப்பில்லை

பருவ வயதில்
வரும் வெள்ளம்
அணை கட்டிவிட்டால்
நின்றுவிடும்

கற்கும் வயதில்
விட்ட கல்வியை
காற்றில்லா விடில்
தூற்ற முடியா...

இத்தனையும் தெரியாவிட்டால்
இலட்சிய வாழ்க்கைக்கு
பாதையில்லை

இன்றைய அத்திபாரமும்
நாளைய கட்டடமும்
பருவ வயது
மாங்கயரில்தம்
இளைஞரிலுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 கவி அன்னையுடன் வாக்குவாதம்

கவி எழுத ஆசை கொண்டு
தரையிறங்கினேன்...
கவி என்னும் கடற்கரையில்...

கவி என்னும் ஆழ்கடல் புரியாமல்
நீச்சல் தடாகத்தில்
நீச்சல் போட
அச்சமின்றி கடலிறங்கினேன்

சிறு தூரம் செல்லவில்லை
சொல் என்னும் அலை அடிக்க
கவி என்னும் ஆழ்கடல்
என்னைப் பயமுறுத்தியது

கற்றாயா? பட்டம் பெற்றாயா?
அறிவிருக்கா? சொல்லிருக்கா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய அணி இருக்கா?
இல்லை இலக்கண
இலக்கியம் தான் கற்றாயா?
இத்தனையும் இல்லாமல்
எப்படி என்னுள் இறங்கினாய்?

கற்கவில்லை - இன்னும்
பட்டம் பெறவில்லை
சிறிதறிவிருக்கு - போதுமான
சொல்லிருக்கு - அழகாக்க
கொஞ்சம் அணியிருக்கு

முட்டாள்! முட்டாள்!
கவி என்ற ஆழ்கடல் தெரியாமல்
படகில்லை துடுப்பில்லை
எப்படி காவியம் தேடப்போகிறாய்

மன்னியும் மன்னியும்!
முயற்சி என்னும் இறக்கையும்
நம்பிக்கை எனும் சுவாசமும்
என்னிடம் இருக்க ஏது பயம்?

இறங்கி விட்டீரோ - நீரும்
நம்பிக்கையுடன்
இறுமாப்பாய் கதை சொல்லி
என்னை நீ மடக்கமுடியா
தடை என்னும் சுறாமீனும்
வீழ்வென்னும் திமிங்கிலமும்
உம்மைக் கொல்லும்

தடைவந்தால் தகர்த்திட
போட்டி என்னும் தூண்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வம் என்னும் வலையும்
கையிருக்க ஏது பயம்?

கவி அன்னை என்னை
கவி வரியில் மடக்கி
கண்ணீர் விட வைத்தாய்
கண்ணே! உனக்கோர் - வரம்
கொடுக்க
கவி அன்னை வேண்டுகிறேன்

கவி மீது கொண்ட பற்றால்
கவி அன்னை உம்மை
அவசரமாய் திட்டிவிட்டேன்
அம்மா என்னை மன்னிப்பதே
நீ கொடுக்கும் முதல்வரம்

கவி மகள் நீ என்னை
கேட்பதற்கு மன்னிப்பு
தேவையில்லை - நீ!
கன்னிக் கவி எழுதிய
அன்றே உன்னை தான்
வாழ்த்தினேன்.
உன் கவிக்கு துணை
நிற்க இவ் அன்னை
என்றும் சாட்சி.

அன்னை உனக்கு
நன்றி சொல்ல
இந்த ஜென்மம்
போதாதம்மா
நம்பிக்கை நான்
கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கவி எழுதிட
அன்னை நீ
துணை நின்று
என்னை நீ
வாழ்த்திடும்

மகளே!
தாய் சேய் பாசம்
பொய்த்ததில்லை
அன்னை வாக்கு
தவறியதில்லை
என்றும் துணை
நின்று உன்னை
நான் வளர்த்திடுவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28 ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்

சின்னஞ் சிட்டுக்களே!
சிங்கார மொட்டுக்களே!
சிரித்துவரும் வாழ்க்கையும்
சிங்காரிக்கும் இளமையும்
உன்னதமான உன்கையில்
உள்ளபோது உன்னால் மட்டுமே
உலமை வெல்ல முடியும்

சின்னஞ் சிட்டே நீ - உன்
எதிர்காலத்தை சிதறடித்து விட்டாய்
புதைகுழி தோண்டி அதற்கு
பூவும் பொட்டும் கூட
வைத்து விட்டாய்

பத்துமாதம் பெற்ற வயிறும்
பல ஆண்டு வளர்த்த தந்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை ஆசைகள் சுமந்து
ஆயிரமாயிரம் கோட்டை கட்டி
அன்பாய் வளர்க்கும் போதெலாம்
உனக்குப் புரியாதடா
நீ - செய்யும் ஊமத்தனம்

ஓட்டைப் படகில்
சுழியோடத் தெரியாதவன்
செல்பவனைப் போல
ஒழுக்கமற்ற கல்வியில்
ஏது பயன்?

சின்னஞ் சிட்டே!
வீதி வீதியாய் அலைந்து
வீண் வம்பு அளக்கின்றாய்
ஊரே கூடி உனை
உதைக்காத குறையாய்
சிரிக்கிறது.

போதைக்கு அடிமையாகி
சினிமாத் திரையரங்கில்
சிரித்துக்கொண்டு நிற்கிறாய்

சிட்டே நீ பறப்பதெல்லாம்
படிப்பதற்கும் - நல் ஒழுக்கத்தை
கடைப்பிடிப்பதற்கும்
மட்டுமே!
"சிகரட்" "பிடிப்பதற்கும்
சிங்காரித்து திரியவுமல்ல

ஒழுங்கு தனைக் கடைப்பிடித்து
ஆசான் தனை மதித்து நடந்து
ஒழுங்காய் பள்ளி சென்று
அன்னை வார்த்தை முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசான் வாங்குவரை தட்டாமல்
கற்பதே உன் அடிப்படை வேலை

ஏப்பம் விட்டு
மோப்பம் கொள்ளும்
நாளல்ல நினைத்துக் கொள்
புத்தியுள்ளவனடா...நீ!

பாரெல்லாம் படித்தவன்
ஊரெல்லாம் ஒழுக்கமுடையான்
நாளெல்லாம் நன்னாளாய் மாற
ஏங்குகிறது
உன் உறவுகள்

நன்றாக சிந்தி
நீ விட்ட தவறுகளய்
புரியும்படி சிந்தி - உனக்கு
புதியதோர் உலகமுண்டு
ஒழுக்கம் என்னும் கீதை அதை
ஒழுங்காகக் கற்று நடந்தால்
கல்வி என்னும் கிருஷ்ணன்
மட்டுமன்றி
இயற்கை அறிவும் கூடவே
உன்னை நாளை
வரவேற்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 கருக்கலைப்பு

தாய்மையின் வாடல்
தாரத்தின் தண்ணீர்
கருப்பையின் வெந்நீர்

இகழ்வுக்காக
உதிர்ந்த மொட்டு

பிரம்மன் தோல்வி
தீக் காற்றின் வெற்றி

தீய நட்பின்
களவாடிய கற்பு

இருந்தும்
இளந் தாய்மையின்
கௌரவக் காப்பு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 கறுப்பு

எழுத முயன்றேன்
எம்மவர் வாழ்வை
ஒரே கறுப்பு
எழுத்து மட்டுமல்ல
எம்மவர் வாழ்வு

## விதி

தாளம் போட்டு
பாடினாலும்
என்னதான்
கூச்சலிட்டு
ஓடினாலும்
ரயிலின்
திருமணம்
தண்டவாளத்தோடுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 காகிதத்தில் கடவுளுக்கு கடிதம்...

கவி இதழில்
கரம் கூப்பி
காகிதத்தில்
கடிதம் எழுதி
கண்ணா - உனக்கு
அனுப்புகிறேன்
கச்சிதமாய் ஓர்
கடிதம்

காகித இடது
கரையில்
கறுப்பு மை பேனா கொண்டு
கண்ணாய் உள்ள
என் முகவரி போட்டு
கவி வரியில் தொடங்குகிறேன்
உனக்கெழுதும்
கடிதமதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம் தனை விசாரிக்க
நீ மானிடப் பிறவியல்லன்
நாளுமே நீ
நலம் வாழ - கண்ணா!
நாற்திசையும்
துணை நிற்கும்

கண்ணா - உன் தோழி
கண்முன்னே கண்கலங்க
நீ அங்கே
நிலா போன்ற முகத்தோடு
நிம்மதியாய் உறங்குகிறாய்

பாரெல்லாம் பாவலர்கள்
பாவிகளாய் பட்டினியிருக்க
பக்குவமாய் நீ அங்கே
படுத்துறங்குகிறாய்!

ஊரெல்லாம்
உலை வைத்து
ஊசலில்
உயிராட வைக்கிறாய்!
உயிரோடு எமை
உருக்குகிறாய்!

மக்களைக் காப்பாற்ற
மழை நாளில்
மலை தூக்கினீர் - என்றறிருந்தோம்
இன்று,
மண்ணோடு மண்ணாய்
மாண்டுபோகும் பிஞ்சு
மாந்தரை எப்படி
தோழா
காப்பாற்றுவாய்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளை இன்றி
இன்று நான் வினாத்தொடுத்தால்
என் தோழன் நீ
என்னை மறந்து விடுவாய்
என்றெண்ணி
இத்துடன் முடித்து
மறுமடலில் தொடரும்வரை
உன் தோழியாய்
நன்றி கூறி

இப்படிக்கு
ஆருயிர் நண்பி
அபிக்குட்டி என
ஆசையாய் முடிக்கின்றேன்
சிறு மடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32 சொட்டும் துளி

கவி எழுத ஆசை கொண்டு
காகிதத்தை கையில் எடுத்தால்
கண்ணீரும் சேர்ந்து
காவியம் படைக்கவென
புறப்பட்டு விடுகிறது
கடந்த காலத்தை எண்ணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 எனக்கு வேண்டும்

மறுபடி
மனித ஜென்மம் - என்று
மரித்தால்
மாதா உன் காலாய்
நான் பிறக்க வேண்டும்!

இருட்டறையானாலும்
இதமான தூக்கம்
இங்கிதமாய் உன் கருவறையில்
இன்னொரு தடவை
எனக்கு வேண்டும்!

வேதனையின் துடிப்பிலும்
பிறந்த குழந்தை முகம்பார்த்து
புன்னகைக்கும்
உன் சிரிப்பு வேண்டும்!

ஆண்டுகள் முழுதும்
அன்னை மடி துயிலுறங்க
அன்னை முன்
எனக்கு
ஆண்டவனை
அடையும்
வரம் வேண்டும்!

(உதயனில் பிரசுரமாக்குவதற்காக எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34 ஆத்மாவாய் அழுகின்றேன்...

விளையாட்டு
வினையாகு மென்பர்
விதியெனைத் துரத்தியதா - இல்லை
விதி தேடிச் சென்ற
நதியா
நானென்று புரியவில்லை!

விளையாட்டாய் செய்தது
விழுத்தியது உன் உயிரென்று
உடலை நோக்கி
விடுத்தது
வினாவை!

அறியாமல்
கிடைப்பது மரணமென்பர்

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.
06159



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமலா
சொந்த உயிருக்கே
மரண அறிவித்தல்
கூறிச் சென்றேன்?

மதயானை என்றறிந்திருந்தும்
மாட்டிக் கொண்டேனே
மாணவன் என்று தெரிந்திருந்தும் - தொலைத்தேனே
என் உயிரை

கூட்டமொடு யானை
தங்கமென்பர்
கூட்டமொடு நண்பர்
நரகமா?
தனியொரு யானை
மதமென்பர்
மாட்டிவிட்ட நண்பர்
தனிமரமாய் நான்??

இன்றெனக்குப் பரீட்சையடா
இதையெழுத ஆசையடா
இலட்சியங்கள் புதைந்ததடா

கற்றவை அனைத்தும்
உயிருடன் இருக்கிறது
எழுத உடலில்லை
வாழ உயிரில்லை
தோற்று விட்டேன்
என் வாழ்வில்!

குறும்புத்தனம் நல்லதென்பர்
விஞ்சிய குறும்புகள்
நிலை குலைத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சிய குழப்பபடிகள்
எனை சீரழித்தது

அறியா வயதியில்
ஆண்டவனிடம் சென்றதையெண்ணி
ஆத்மாவாய்
அழுகின்றேன்...

**(முருகானந்தாக் கல்லூரி 2015 மாணவர் விசுவமடுவில் யானை அடித்து இறந்த போது அவர் பற்றி கல்லூரியில் கேட்டுத் தெரிந்த போது கண்ணீருடன் எழுதியது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 தோழமைக்காக...

நட்பென்று சொல்லிக்கொள்ள யாருமில்லை
நடை பிணமாய் நான்...
நாட்கள் பலதில்
நான் தனியே சென்ற நாட்களே அதிகம்
நண்பி என்று சொல்ல
நல்ல பெயர் கூட இல்லை
நாட்கள் சிலதில் - ஏங்கிக் கொண்டேன்
நல் நட்புக்காய்...

கேட்போர் உறவுக்கு
நட்பென்ற வெற்றிடத்தில்
அன்னை பெயர் இட்டு சொன்னதே
அருமை நாட்களில் அதிகம்

கூடியே உணவுண்டு
கூடியே இருந்து
கூடியே சென்றவேளை
பொறாமை கொண்டதுண்டு
கூடிய நட்பு
அன்னை நட்பில்
பெருமை கொண்டேன்
அன்னையின் தோழமைகண்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 விடையறியா விடையொன்று

பேருந்தில்
பெரும்பயணம்
பேரிடியாய்
பல அறிந்தேன்!

அறியாத வயதொன்றில்
அழைக்கின்றான்
வாங்குங்கள்! வாங்குங்கள்!
ஒன்றேனும் வாங்கிடுங்கள்
கையில் சில பெட்டிகள்
ஊது பத்திப் பெட்டியாம்

இங்கே வாவென்று
என் சித்தி அழைத்தார்
என்ன இது
பள்ளிப் பிள்ளை நீ
பத்தி விற்கிறாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண உணவில்லை
உறங்க இடமில்லை
கற்க வசதியில்லை
சங்கடமாய் சொன்னான்

தேவையான பணம் தந்து
உண்ண உணவு
உறங்க இடம்தந்தால்
பத்தி விற்பதைவிட்டு
படிக்கச் செல்வாயா?

வேண்டுமென்றால் - பத்தி
வேண்டுங்கள்
பல கேள்வி கேட்டு
பாடாய் படுத்தாதீர்கள்

எஜமானார் கண்டால்
எள்ளுக் காசும் கிடையா
அள்ளி விடுவார் என்னை
தள்ளி விடுவார் ஆங்கே
பயந்த கதையில்
யதார்த்தமாய் உண்மை

ஆராய்ந்ததில் அறிந்தோம்
அப்பன் இலா வாழ்க்கை
அசையா நோயில் அன்னை
ஐந்து வயதில் தங்கை
பள்ளிக் கட்டணம் கட்ட
வசதியில்லா அக்கா
வலுவற்ற அண்ணன் - மொத்தமதில்
வாடுகின்ற குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் மழையில்லை
சூடு குளிர் இல்லை
இடி மின்னல் இல்லை
எல்லாம் தாங்கிப் பழகிய
அந்தப் பிஞ்சின் மனம்
எரிவது கண்டு
ஏங்கினோம்

எஜமானுக்குப் பயந்து
குடும்ப சுமை குறைக்க
கொடுக்கப்பட்ட வாழ்க்கை
புதைக்கப்பட்ட கல்வி
சிதைக்கப்பட்ட இலட்சியம்
பார்த்தோம்
படத்தில் பார்த்தது
யதார்த்தமாய்...

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

பொறுக்காத கண்கள்
முடியுமானமளவு உதவியளித்தது
கோயிலுக்கிடும் கைகள்
ஏழைகளுக்காக
இறங்குகள்!
இரங்குங்கள்!

06159

(யாழ்ப்பாணம் சென்றபோது நேரில் கண்ட காட்சி கண்டு எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகம்
மத்திய சனசமூக நிலையம்
விசுவமடு.

இப்புத்தகம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கையழித்தல் வேண்டும். குறித்த தவணைக்குள் கையழிக்கப்படாத புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் வாரம் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 10/= அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 07/12/2020<br>100 | | |

"அறிவைப் பெருக்க துணைபுரிவோம்"
நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பாடசாலைக் காலத்தில் கற்றலோடு புறக்கிருத்திய செயற்பாடு களிலும் சிறந்து விளங்கும் தனுஜா பிள்ளைக் கவியாக எனது நிகழ்ச்சிகளில் அறிமுகமாகி இன்று வளரும் கவியாக சிறப்பாக தன் வயதை ஒத்த பிள்ளைகளின் உள்ளக்கிடக்கைகளை கவிதையில் சொல்வதில் வெற்றிகண்டு வருகிறார். ஒரு மைதான ஓட்ட வீராங்கனையாக வெற்றியை இலக்கு வைத்து வெல்லும் கலை தெரிந்த இவருக்கு கவிதையிலும் தன் சமூகம் சார்ந்த பதிவுகளை பிரஸ்தாபிப்பதில் வெற்றி கிடைத்து வருவது பெருமைக் குரிய விடயம். நெறிப்படுத்தப்பட்ட பெற்றோர் வளர்ப்பும், சரியான துல்லியமான ஏனையவர்களின் வழிகாட்டல்களும் அவருக்கு வாழ்வில் ஏறு முகத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.

சில வேளைகளில் வயதுக்கு மீறிய சமுதாய நலத்தாக்கம் இவர் கவிதைகளில் வெளிப்படுவதைக் கண்டு வியந்திருக்கிறேன். இவரை இந்த நிலைக்கு உயர்த்திவிட்டு மகிழும் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி பாராட்டுகிறேன். இவருடைய கவிதைகள் அடங்கிய இந்தப் பதிவு காலத்திற்குத் தேவையான ஒன்று. இதற்காக உழைக்கும் எல்லோருக்கும் எனது நன்றியும் வாழ்த்துக்களும்!

என்றும் அன்புடன்
T.S.முகுந்தன்
சிரேஸ்ட அறிவிப்பாளர்
தமிழ் F.M

9 789554 264007

MATHI COLOURS 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org